**செ.வெ.எண்:22** **நாள்: 14.07.2020**

பெரம்பலூர் மாவட்டம்

**பெரம்பலூர் மாவட்டத்தில் 3 கோடியே 43 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள புதிய பாலங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி.கே.பழனிசாமி அவர்கள் காணொளி காட்சி மூலம் திறந்து வைத்தார்கள்.**

**அதன் விபரம் பின்வருமாறு:**

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, பல்வேறு திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது. அதடினடிப்படையில் பெரம்பலூர் மாவட்டம் குன்னம் வட்டம் எழுமூர் - மலவராயநல்லூர் சாலையில் ரூ.1.98 கோடியில் கட்டப்பட்டுள்ள பாலம் மற்றும் குன்னம் வட்டம் கொளக்காநத்தம் - சிறுகன்பூர் சாலையில் ரூ.1.45 கோடியில் கட்டப்பட்டுள்ள புதிய பாலம் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி.கே.பழனிசாமி அவர்கள் இன்று (14.07.2020) சென்னை தலைமை செயலகத்திலிருந்து காணொளி காட்சி மூலம் திறந்து வைத்தார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் இக்கட்டிடம் திறந்து வைக்கப்பட்டதை தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.வே.சாந்தா இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டார்கள்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், பெரம்பலூர்.**